9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1992–93, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1992–93 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992–93 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1992–93 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிறைவேற்றப்பெற்ற 1992–1993 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
5	முத்திரைத் தாள்கள்–நிருவாகம்	27,15,256
7	மாநிலச் சட்டமன்றம்	8,37,330
19	பொதுச் சுகாதாரம்	1,60,63,237
20	வேளாண்மை	14,96,50,355
24	தொழில்கள்	27,85,202
34	நகர்ப்பகுதி வளர்ச்சி	4,77,89,386
35	நுகர்பொருள் வழங்கல்	3,81,747
37	பொதுப் பணிகள்–கட்டிடங்கள்	4,38,41,387
42	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	5,24,62,270
44	எழுதுபொருள்–அச்சுத் துறை	63,07,403
46	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	3,10,50,554
மொத்தம்–அ. வருவாய்க் கணக்கில் செலவு		**35,38,84,127**
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		
57	சாலைகள்–பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	35,68,278
60	ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	3,17,261
மொத்தம்–ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		**38,85,539**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	(ரூபாய்)
இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்	
62 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	13,34,38,551
பெரு மொத்தம்	**49,12,08,217**

10. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1993–94, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1993–94 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1993–94 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1993–94 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS